

இன்றைய செய்தி நாளைய வரலாறு

முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

செவ்வாய்க்கிழமை 25.08.2026

# ‘ஒவ்வொரு தொண்டரும் ஒரு நிர்வாகி’

**தி**ராவிட முன்னேற்றக் கழகத்தை வளப்படுத்தவும், நலப்படுத்தவும், உறுதிப்படுத்தவும் உணர்வுப்படுத்தவும் புதிய மறுசீரமைப்பை கழகத் தலைவர் திராவிட நாயகன் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆகஸ்ட் 22 அன்று நடைபெற்ற கழகத்தின் தலைமைச் செயற்குழுவில் அறிவித்துள்ளார்கள்.

**‘நிலைக்கண்ணாடியில் அடிக்கடி பார்ப்பதைப் போல அகக்கண்ணாடியில் அடிக்கடி பாருங்கள்’** என்பார் முத்தமிழறிஞர் கலைஞர். அப்படி அகக்கண்ணாடியில் பார்க்கும் படலமாகத்தான் தலைவர் அவர்களின் உரை அமைந்துள்ளது.

**“திராவிட முன்னேற்றக் கழகம் தொடங்கப்பட்டு 75 ஆண்டுகள் கடந்த பிறகும், கழகம் வலிமையோடு இருப்பதற்கான காரணம், நம் அமைப்பு முறைதான். தலைவர் கலைஞரின் வரிகளை நீங்க மறந்திருக்க மாட்டீர்கள். ‘இந்த கருணாநிதியின் வாழ்வு முடிந்தாலும், திராவிட முன்னேற்றக் கழகத்தின் வாழ்வு முடியாது! அதனை, அதன் அமைப்புமுறை காப்பாற்றும்!’ என்றார். இதுதான் தலைவர் கலைஞர் அவர்கள் குறிப்பிட்டது. அப்படிப்பட்ட அந்த அமைப்பு முறையின் வலிமையால்தான், நாம் நிற்கிறோம்”** என்று தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்கள். இந்த அமைப்பு முறையின் பலத்தில்தான் கழகம் இயங்குகிறது. அதனை மேலும் மேலும் வலிமைப்படுத்தவே தலைவர் நினைக்கிறார்.

கிளைக்கழகச் செயலாளர்கள், வட்டக் கழகச் செயலாளர்கள் அதிகபட்ச வயது 45 என்றும், மாநகர-நகர-பேரூர்-வட்டக் கழகச் செயலாளர்களின் அதிகபட்ச வயது 50 என்றும், பேரூர்க் கழகச் செயலாளர்களின் அதிகபட்ச வயது 60 எனவும், பகுதிக் கழகச் செயலாளர்களின் அதிகபட்ச வயது 60 எனவும், நகரக் கழகச் செயலாளர்களின் அதிகபட்ச வயது 60 எனவும், ஒன்றியக் கழகச் செயலாளர்களின் அதிகபட்ச வயது 60 எனவும் நிர்ணயிக்கப்படுகிறது. ஒருவர் அதிகபட்சம் இரண்டு முறை மட்டுமே அப்பொறுப்பை வகிக்க முடியும்.

வருவாய் மாவட்டங்களின் அடிப்படையில் இரண்டு சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு கழக மாவட்டம் என்ற வகையில் மறுசீரமைப்பு மேற்கொள்ளப்படுகிறது. இனி 110 மாவட்டங்களாக கழக அமைப்பு இயங்கும். மாவட்டக் கழகச் செயலாளரின் அதிகபட்ச வயது 70 என நிர்ணயிக்கப்படுகிறது. ஒருவர் அதிகபட்சம் மூன்று முறை மட்டுமே அப்பொறுப்பை வகிக்க முடியும்.

புதிய புதிய உடன்பிறப்புகள் பொறுப்புகளுக்கு வர வேண்டும், பொறுப்புகளுக்கு வருகிறவர்கள் புத்துணர்வுடன் செயல்பட வேண்டும், ‘நமக்கும் ஒரு வாய்ப்பு வரும்’ என்று தொண்டர்கள் கருதிச் செயல்பட வேண்டும் என்ற அடிப்படையில் இந்த மாறுதல்களை தலைவர் அவர்கள் செய்துள்ளார்கள்.

காலங்கள் தோறும் கழகம் தன்னைப் புதுப்பித்துக் கொண்டே வந்துள்ளது. இத்தகைய புதுப்பிப்பு என்பது ஆட்சியில் இருந்தபோதும் நடந்துள்ளது. எதிர்க்கட்சியாக இருந்தபோதும் நடந்துள்ளது. தேர்தல் முடிவுகளுக்கும் இதற்கும் தொடர்பு இல்லை.

கழகத்துக்குத் தடை என்கிற அளவுக்கு எல்லாம் பேரறிஞர் அண்ணா காலத்தில் சிக்கல்கள் ஏற்பட்டது. அப்போதும் அண்ணா அவர்கள், கழகத்தைக் கட்டிக்காக்கும், வலிமைப்படுத்தும் முடிவுகளைத்தான் எடுத்தார்கள். அமைப்பு பலமாக இருந்தால் கொள்கையைக் காப்பாற்றலாம் என்பதே அண்ணாவும் கலைஞரும் போட்டுத் தந்த பாதை ஆகும்.

**திராவிட முன்னேற்றக் கழகம் என்பது ஆட்சியைப் பிடிப்பதற்காக உருவான இயக்கம் அல்ல. கழகம் தொடங்கிய போது தேர்தலில் நிற்கும் எண்ணமே இல்லை. தமிழ்ச் சமுதாயத்தின் விடியலுக்காக உருவான விடுதலை இயக்கம். சமூக சீர்திருத்தக் கோட்பாடுகளை நடைமுறைப் படுத்த அதிகாரம் தேவை என்ற அவசியத்தை உணர்ந்து தேர்தலில் நின்று சட்டமன்றத்தைக் கைப்பற்றிய இயக்கம். எனவே தேர்தல் வெற்றி, தோல்விகளுக்காக எந்த முடிவும் இதுவரை எடுக்கப்பட்டது இல்லை. எந்த முடிவும் கொள்கையை வென்றெடுக்க உருவாக்கப்படுமே தவிர, தேர்தலை மனதில் வைத்து அல்ல.**

இயக்கம் என்ற ஒன்று இருந்தால் தான் கொள்கையை வெற்றி பெற வைக்க முடியும். அந்த இயக்கத்தை வலிமைப்படுத்த தொண்டர்களின் சிந்தனைக்கு தலைமை முக்கியத்துவம் தரும். அதுவே செயற்குழு, பொதுக்குழு ஆகும். இப்போது தலைவர் உருவாக்கித் தந்திருக்கும் மறுசீரமைப்புத் திட்டமும் தொண்டர்களின் எண்ணத்தில் இருந்தவைதான். 38 குழுக்கள் தமிழ்நாடு முழுவதும் சென்று உடன்பிறப்புகளின் கருத்துக்களைப் பெற்று கொடுத்த தகவல்களை முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு தலைமையிலான குழு தொகுத்து வழங்கி இருக்கிறது. அவர்கள் கொடுத்த ஆலோசனைகளைத் தான் சீரமைப்புத் திட்டமாக வடித்தெடுத்து வழங்கப்பட்டுள்ளது.

உறுப்பினர் சேர்க்கை - கட்சித் தேர்தல் - புதிய பொறுப்பாளர்கள் பொறுப்பு ஏற்பது என கழகம் பரபரப்பாக இருக்கிறது. இதுதான் பல ஆண்டுகளாக உடன்பிறப்புகள் அனைவரும் எதிர்பார்த்துக் காத்திருந்த மாற்றம் ஆகும். அதனைத்தான் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் செய்துள்ளார்கள்.

**“ஒரு மலையைப் பிளந்து கற்களாக்குகிறோம். அவற்றில் ஒரு கல்லில் விக்கிரகம் உருவாக்குகிறோம். மற்ற கற்கள் மண்டபங்கள் ஆகின்றன. கோபுரமாகின்றன. மதில் சுவராகின்றது. எல்லாக் கற்களும் விக்கிரகங்கள் ஆகிவிட முடியாது. அப்படி ஆகிவிட்டால் பிறகு கோயில் இருக்க முடியாது. விக்கிரகமாயிருக்கிற கல்லும்; தானும் மற்ற கற்களைப் போலத்தான் மலையிலிருந்து வந்தோம் என்பதை மறந்து விடக்கூடாது. கோயில் இருப்பதால்தான் விக்கிரகத்துக்கு அபிஷேகம் - ஆராதனை எல்லாம்! இல்லையேல், அது எந்த மரத்தடியோ? அல்லது படித்துறையோ? ஒரு அமைப்பில் எல்லா பொறுப்பிலும் இருப்போர் உணர்ந்துகொள்ள வேண்டிய உண்மை இது!”** என்றார் தலைவர் கலைஞர். அத்தகைய உணர்ச்சியைத் தான் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஊட்டி வருகிறார்கள்.

**“ஒவ்வொரு தொண்டனும் ஒரு நிர்வாகியாகச் செயல்படும் போதுதான் இயக்கம் வளரும்; இயக்கம் வாழும்!”** என்று ஆணையிட்டுள்ளார் தலைவர் மு.க.ஸ்டாலின். அத்தகைய காலம் உருவாக இருக்கிறது.

**திராவிட முன்னேற்றக் கழகத்தின் திருப்பணி என்றென்றும் தொடரும்!**

●●

### சட்டப்பேரவையில் எதிர்க்கட்சிகளின்

# கேள்விகளுக்குப் பதிலளிக்க முடியாமல் திணறும் அமைச்சர்கள்!

## கழகப் பொதுச் செயலாளர் துரைமுருகன் பேட்டி!

**குடியாத்தம், ஆக. 25 -**

**100 நாள் த.வெ.க. ஆட்சியில் எதையும் செய்யவில்லை, தி.மு.க. ஆட்சியின் திட்டங்களின் பெயர்களை மாற்றியுள்ளதுதான் அவர்களின் ஒரே சாதனை என, தி.மு.க. பொதுச் செயலாளர் துரைமுருகன் விமர்சித்துள்ளார்.**

வேலூர் மாவட்டம் குடியாத்தத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், த.வெ.க. தேர்தல் அறிக்கையில் கூறிய மகளிருக்கு 2 ஆயிரத்து 500 ரூபாய், 6 இலவச சிலிண்டர் உள்ளிட்ட எந்த அறிவிப்பையும் செயல்படுத்தவில்லை என்று கூறினார்.



சட்டப்பேரவையில் எதிர்க்கட்சிகளின் கேள்விகளுக்கு பதிலளிக்க முடியாமல் த.வெ.க. அமைச்சர்கள் திணறுவதாகவும் தி.மு.க. பொதுச்செயலாளர் துரை முருகன் விமர்சித்தார்.

100 நாள் த.வெ.க. ஆட்சியில் எதையும் செய்யவில்லை என்றும், தி.மு.க. ஆட்சியின் திட்டங்களின் பெயர்களை மாற்றியுள்ளதுதான் அவர்களின் ஒரே சாதனை என்றும் அவர் சாடினார்.

### பெண்கள் – குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் - ஆணவக் கொலைகள் பெருகிக் கொண்டு வருகின்றன!

# சட்டமன்றத்தை ‘ரீல்ஸ்’காகத்தான் த.வெ.க. அரசு நடத்துகிறது!

## கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. பேட்டி!

**தூத்துக்குடி, ஆக. 25 -**

**த.வெ.க. ஆட்சி பொறுப்பேற்றதில் இருந்து குற்றங்கள் பெருகி வருகிறது என்றும், சட்டமன்றமே ரீல்ஸ்காகத்தான் த.வெ.க. ஆட்சியில் நடக்கிறது என்றும் கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி. செய்தியாளர்களுக்கு பேட்டி அளிக்கையில் குறிப்பிட்டார்.**

தூத்துக்குடி விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்த தி.மு.க. துணைப் பொதுச் செயலாளரும், நாடாளுமன்ற தி.மு.க. குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி, செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.

த.வெ.க. ஆட்சிப் பொறுப்பேற்றுக் கொண்ட பிறகு தொடர்ந்து குற்றங்கள் பெருகிக்கொண்டு வருகிறது. பெண்களுக்கு, குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள், ஆணவக் கொலைகள், லாக்அப் மரணங்கள் என்று சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு இருக்கக் கூடிய சூழலை பார்த்துக் கொண்டிருக்கிறோம்.

அதிலும் இந்தக் குற்றங்களைச் செய்திருக்கக்கூடியவர்கள் த.வெ.க.வைச் சேர்ந்தவர்களாக இருக்கிறார்கள் என்பது கவலையளிக்கிறது.



சில நேரங்களில் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படுகிறது; பல நேரங்களில் நிர்வாகிகள் மீது குற்றம் பதிவு செய்யப்பட்டாலும், அவர்களை நோக்கி விரல்கள் சுட்டிக்காட்டினாலும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படுவதில்லை என்பதை பார்த்துக்கொண்டிருக்குறோம். அதனால் சட்டம் ஒழுங்கு மிகப்பெரிய கேள்விக்குறியாக த.வெ.க. ஆட்சியில் மாறியிருக்கிறது.

மாணிக்கம் தாகூர் அரசாங்கத்தை பற்றி பேசுகிறார். ஏனெனில் அவர்கள் அங்கம் வைக்கின்ற கூட்டணி ஆட்சி. ஆனால் சட்டமன்றமே ரீல்ஸாகத்தான் நடத்தப்படுகிறது என்ற உணர்வை த.வெ.க. அரசு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள் என்றார்.

### தமிழரின் தொன்மை – பண்பாட்டு அடையாளத்தை எடுத்துரைக்கும் வகையில்

# மலையடிப்பட்டியில் கி.பி. 5 ஆம் நூற்றாண்டு கல்வெட்டு கண்டுபிடிப்பு!

## முன்னாள் அமைச்சர் தங்கம் தென்னரசு பெருமிதம்!

**சென்னை, ஆக. 25 -**

**விருதுநகர் வடக்கு மாவட்டச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான தங்கம் தென்னரசு சமூக வலைதளத்தில் விடுத்துள்ள பதிவு வருமாறு:-**

தென்காசி மாவட்டம், மலையடிப்பட்டி அகழாய்வில், படிக்கட்டுடன் கூடிய சங்ககாலச் செங்கல் கிணற்றில் இருந்து கி.பி. 5ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதத்தக்க நடுகல் கல்வெட்டு ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது.

தமிழி எழுத்து முறையில் இருந்து வட்டெழுத்தாகத் தமிழின் வரிவடிவம் உருமாறிய காலத்தைச் சேர்ந்த இக்கல்வெட்டில், “கருக்கண் சுளகன் நன்னங்கொடியன்” என்ற பெயர் இடம்பெற்றுள்ளது.



புலிமான் கோம்பை, ஆப்பனூர், மல்லிகாபுரம் ஆகிய இடங்களில் கண்டெடுக்கப்பட்ட நடுகற்களைப் போலவே வீரரின் உருவம் பொறிக்கப்படாமல், எழுத்தின் வழியே நினைவைப் பதிவு செய்திருப்பது, அக்காலத் தமிழர்களின் எழுத்தறிவு, வீரமரபு மற்றும் பண்பாட்டு நுண்ணுணர்வை வெளிப்படுத்தும் அரிய சான்றாக அமைந்துள்ளது.

ஆயிரம் ஆண்டுகளைக் கடந்தும் நமது மண்ணில் நிலைத்திருக்கும்





இத்தகைய கல்வெட்டுகள், தமிழரின் தொன்மையையும் தனித்துவமான பண்பாட்டு அடையாளத்தையும் உலகிற்கு எடுத்துரைக்கும் பெருமைமிகு வரலாற்றுப் பக்கங்களாகத் திகழ்கின்றன.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### ‘தட்கல்’ முறையில் பணம் கட்டி

# மின் இணைப்புக்காகக் காத்திருக்கும் 60,120 விவசாயிகள்!

## த.வெ.க. அரசு நடவடிக்கை எடுக்குமா?

*ஈரோடு, ஆக.25 -*

*தமிழ்நாட்டில் தட்கல் முறையில் விவசாய மின் இணைப்புக்காக பணம் செலுத்தி காத்திருக்கும் 60,120 விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா? என விவசாயிகள் கேள்வி எழுப்பி உள்ளனர்.*

*ஈரோடு மாவட்ட உழவர் விவாதகுழு தலைவர் நஞ்சப்பன், செயலாளர் வெங்கடாசலபதி இணைந்து, தமிழ்நாடு முதல்வருக்கு அனுப்பிய மனுவில் கூறியிருப்பதாவது: -*

*தமிழ்நாட்டில் கட்டணமில்லா வேளாண் உரிமை மின்சார திட்டத்தின் கீழ் 23 லட்சத்து 56 ஆயிரம் மின் இணைப்புகள் உள்ளது.*

*இதுதவிர 4 லட்சத்துக்கும் மேற்பட்ட விவசாயிகள் சாதாரண திட்டத்தில் மின் இணைப்புக்கு பதிவு செய்து காத்திருக்கின்றனர். இந்நிலையில், தமிழ்நாடு அரசு மின் துறையில் 2025ல் விவசாயிகளுக்கு விரைந்து மின் இணைப்பு வழங்கும் தட்கல் திட்டத்தில் விண்ணப்பங்கள் பெற அறிவிப்பு செய்து, கடந்த ஆண்டு டிசம்பரில் வெளியிடப்பட்டது. இதன்பேரில், 47,554 விவசாயிகள் ரூ.2.5 லட்சம் முதல் ரூ.4 லட்சம் வரை மின் வாரியத்திற்கு பணம் செலுத்தியுள்ளனர்.*

*மின் இணைப்பு உடனே கிடைக்கும் என்ற நிலையில், வறட்சியான சூழ்நிலையிலும் வட்டிக்கு பணம் வாங்கி செலுத்தியுள்ளனர். மேலும், 2023 தட்கல் திட்டத்தில் 12,566 விவசாயிகள் சுமார் ரூ.250 கோடி பணம் செலுத்தியுள்ளனர். வீடுகள், வணிக நிறுவனங்கள், தொழில் நிறுவனங்களுக்கு விண்ணப்பம் அளித்த 90 நாட்களுக்கு மின் இணைப்பு வழங்கப்படுகிறது.*

*விவசாய பயன்பாட்டிற்கு மட்டும் பணம் செலுத்தியும் பல மாதங்களாக, ஆண்டுகளாக காத்திருந்தாலும் மின் இணைப்பு வழங்குவதில்லை. புதிய அரசு மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்குமா? என்ற கேள்வியும் எழுகிறது. தமிழ்நாட்டில் மொத்தமாக 60,120 விவசாயிகள் மின் இணைப்புக்காக பணம் செலுத்தி காத்திருப்பதை கவனத்தில் கொண்டு, தமிழ்நாடு அரசும், மின்சார வாரியமும் உடனடி நடவடிக்கை எடுத்து மின் இணைப்பு வழங்க வேண்டும்.*

*இவ்வாறு அவர்கள் கூறியுள்ளனர்.*

### கடற்கரை – செங்கல்பட்டு வழித்தடத்தில்

# இன்று முதல் 25 மின்சார ரயில்களின் சேவையில் மாற்றம்!

*சென்னை, ஆக. 25 -*

*எழும்பூர் ரயில் நிலைய மறுசீரமைப்பு பணி காரணமாக, 25 மின்சார ரயில்களின் சேவையில் இன்று (ஆக.25) முதல் செப்.6ம் தேதி வரை மாற்றம் செய்யப்படவுள்ளது.*

**அதன் விவரம்**: *சென்னை கடற்கரை தாம்பரத்துக்கு இன்று (ஆக.25) முதல் செப்.5ம் தேதி வரை (வார நாட்களில் மட்டும்) இரவு 10.20, 11.20, 11.40, 11.59 ஆகிய நேரங்களில் இயக்கப்படும் மின்சார ரயில்கள் ரத்து செய்யப்பட உள்ளன.*

*திருமால்பூர் - சென்னை கடற்கரைக்கு மேற்படி தேதிகளில் இரவு 8 மணிக்கு புறப்படும் மின்சார ரயில், தாம்பரம் - கடற்கரை இடையே பகுதி ரத்து செய்யப்பட உள்ளது.*

*கூடுவாஞ்சேரி-சென்னை கடற்கரைக்கு இரவு 10.15, 11.20 ஆகிய நேரங்களில் இயக்கப்படும் மின்சார ரயில்கள், தாம்பரம் - கடற்கரை இடையே பகுதி ரத்து செய்யப்படவுள்ளன.*

*செங்கல்பட்டு-சென்னை கடற்கரைக்கு மேற்படி தேதிகளில் இரவு 10.20, 11.00 ஆகிய நேரங்களில் புறப்படும் மின்சார ரயில்கள், தாம்பரம் - கடற்கரை இடையே பகுதி ரத்து செய்யப்பட உள்ளன.*

**நேரம் மாற்றம்!**

*சென்னை கடற்கரை - கூடுவாஞ்சேரிக்கு மேற்படி தேதிகளில் இரவு 9.45 மணிக்கு பதிலாக, 5 நிமிடம் தாமதமாக இரவு 9.50 மணிக்கு புறப்படும்.*

*சென்னை கடற்கரை - செங்கல்பட்டுக்கு மேற்படி தேதிகளில் இரவு 10.20 மணிக்கு பதிலாக, 5 நிமிடம் முன்னதாக, இரவு 10.15 மணிக்கு புறப்படும்.*

*சென்னை கடற்கரை - செங்கல்பட்டுக்கு ஆக.26 முதல் செப்.7ம் தேதி வரை (வார நாட்களில்) புறப்பட வேண்டிய மின்சார ரயில், கடற்கரை - தாம்பரம் இடையே பகுதி ரத்து செய்யப்படுகிறது.*

*ஆக.30ம் தேதி முதல் செப்.6ம் தேதி வரை ஞாயிற்றுக்கிழமைகளில், சென்னை கடற்கரை - தாம்பரம் வரை 4 மின்சார ரயில்களும், தாம்பரம் - சென்னை கடற்கரை வரை 2 மின்சார ரயில்களும், திருமால்பூர் - சென்னை கடற்கரை வரை ஒரு மின்சார ரயிலும் ரத்து செய்யப்பட உள்ளன.*

*இதுதவிர 6 மின்சார ரயில்களின் சேவையில் மாற்றம் செய்யப்பட உள்ளன. இத்தகவலை சென்னை ரயில்வே கோட்ட அதிகாரிகள் தெரிவித்தனர்.*